(இ) அதன்படி எல்லா கண்மாய்களுக்கும் முறைப்படி தண்ணீர் விடப்படுகின்றனவா ?

கனம் திரு. வெ. ராமய்யா (அ) .& (இ) : " ஹோல்ட்ட்ஸ் ஓர்த் அணைக்கட்டு " பின் வரும் கண்மாய்களுக்குத் தண்ணீர் விடும் நோக்கத்துடன் கட்டப்பட்டது :—

1. வெல்ல நாடு பெரிய குளம்	1,326.34	எக்காராக்கள்.
2. பழைய கண்மாய்	577.24	"
3. கொத்தமங்கலம் பெரிய கண்மாய்	247.09	,,

(இ) ஆம்.

திரு. பி. முருகையன் : கொத்தமங்கலம் பெரிய கண்மாய்க்கு இதன் மூலம் தண்ணீர் போகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். அந்த அணையின் மூலம் தற்போது தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமய்யா : இப்போது தண்ணீர் பாய்ந்து கொண்டுதான் இருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஹோல்ட்ஸ் ஓர்த் அணைக்கட்டுக்குச் செலவான தொகை எவ்வளவு? எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த அணைக்கட்டு கட்டி முடிந்து பல வருஷங்கள் ஆகிவிட்டன.

காரம்பக்குடி புதுக்குளம்

*6 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அக்கினி ஆற்றிலிருந்து காம்பக்குடி புதுக்குளத்திற்கு தண்ணீர் கொண்டுவர வாய்க்காலின் அகலம் சுமார் 120 அடி வேண்டுமென்று பொறியாளர் சர்வே செய்ததைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று அவ்வூர் பொதுமக்களிடமிருந்து அண்மையில் மகஜர்கள் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) & (இ) ஒரு மகஜர் வந்தது. ஆனுல் அக்கினி ஆற்றிலிருந்து கரம்பக்குடிப் புதுக்குளத்திற்குத் தண்ணீர் கொண்டு வரும் வாய்க்காலுக்கு 100 அடி அகலமான நிலந்தான் ஆர்ஜிதம் செய்யப்பட்டதால் மகஜர் மேல் நடவடிக்கை யெடுக்க அவசியமேற்படவில்லை.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்தக் குளமானது கடைசிப் பகுதியில் வாய்க்காலாகப் பிரிந்து செல்கிறது. அணையின் ஆரம்பப் பகுதியில் வாய்க்காலிலிருந்து குளத்திற்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக வாய்க்காலை அகலப்படுத்த 120 அடி நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் கூறுவது போல் 120 அடியல்ல, 100 அடிதான்.

27th July 1965]

திரு. பி. முருகையன் : தற்போது 120 அடி கூடப் போதாது, அதற்கும் அதிகமாக வேண்டுமென்று விவசாயிகள் துன்புறுத்தப் படுகிருர்கள். இனிமேலாவது அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : 100 அடி அகலத்திற்குத்தான் நில ஆர்ஜிதம் செய்திருக்கிருர்கள். அதற்கு மேல் விவரம் ஒன்றும் இல்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த அக்னி ஆற்றில் தண்ணீர் ஓடுகிறதா? அங்கு இப்போது கட்டப்பட்ட, புதிதாக திறக்கப் பட்ட அக்னி ஆற்று பாலத்திலிருந்து விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : மழை பெய்யக் கூடிய காலத்தில் தண்ணீர் வரும். அந்தத் தண்ணீரை விவசாயிகள் பயன் படுத்த வேண்டும். கனம் அங்கத்தினர் நினைப்பது போல் ஜீவ நதியில் தான் அணைக் கட்டு என்று சொன்னுல் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது.

பால் அபிவிருத்திக்கான திட்டம்

* 7 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து** :
திரு. வை. சங்கரன் : } கனம் உணவு அமைச்சர்

தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் பால் அபிவிருத்திக்காக புதிதாக ஏதேனும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. வெ. ராமய்யா (அ) (இ) : சபைமுன் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த அறிக்கையில் மாதவாம் பால் பண்ணையில் 4,000 மாடுகள் காலனியில் இருப்பதாக இருக்கிறது. ஆனுல் சீக்கு-கள் வந்து உயர்ந்த மாடுகள் இறந்து தற்சமயம் 2,000 தான் அங்கிருப்பது என்பது உண்மையா?

கனம் திரு. வெ. ராமைய்யா : 4,000 மாடுகள் அத்திட்டப்படி அந்தப் பண்ணையில் இருந்தன. ஆனுல் இந்த ஆண்டு ஆரம்பத்தில் ரின்டர்பெஸ்ட் நோய் வந்து ஏராளமான சேதம் அங்கு ஏற் பட்டது. இப்போது இருக்கக்கூடிய மாடுகள் எவ்வளவு என்று என்னுல் திட்டவட்டமாக சொல்ல முடியாது. ஆனுல் 4,000-த்தை விட குறைவாகத்தான் இருக்கும்.

திரு. சா. கணேசன் : பொதுவாக மாநிலம் சம்பந்தப்பட்ட அளவில் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குள்ளே சென்னை போன்ற பெரிய நகரங்களையும் உட்படுத்தி ஆங்காங்கு சிறு சிறு பால் பண்ணைகளை ஒருவர் அல்லது இருவர் சேர்ந்து வைத்து அதன் மூலமாக பால் தட்டுப்பாட்டை நிவர்த்தி பண்ணுவதற்

a 98–99-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.